RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22282

# சங்க இலக்கியங்களில் மர வழிபாட்டு முறைகள்

## மு. சதீஸ்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா.

# Tree cults in Sangam literature

## M. Sathishkumar [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, Tamil Nadu, India

* Corresponding Author: msskumar93@gmail.com

Received: 27-09-2022
Revised: 23-10-2022
Accepted: 20-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The people of the Sangam age had a nature-based way of life. They took what they wanted from nature. They were amazed at nature that fulfilled their needs. Sometimes they were afraid of its wrath and began to worship as a deity. The way it was worshipped was also based on nature. Rituals are inevitable when it comes to the worship of the deity. Those who believed that the deity resided in the trees worshipped each deity by encoding a tree. The trees worshipped have been preserved as the symbols of the tribal people and have been preserved as police trees. This system of worship is essential for the people of all communities. As there is a change in culture and customs, it is observed that there have been many changes in the methods of worship as well. This article examines the worship of trees, one of the natural forms of worship in the life of the People of the Sangam age.

**Keywords:** Tree cults, Rituals, Sangam age, Worship

## முன்னுரை

பண்டைய காலம் தொட்டு சமகாலம் வரை வாழும் மக்கள் இவ்வுலகில் உள்ள ஏதேனும் ஒரு சக்தி தங்களை இயக்குகிறது என்ற நம்பிக்கையோடு தான் வாழ்ந்து வருகின்றனர். அதன் அடிப்படையில் மக்கள் தங்களை மீறிய இயற்கை சக்திகளான ஐம்பூதங்களின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாகவும், அறிவியல் காரணங்கள் அறிந்திராத நிலைகளினாலும் நம்பிக்கையின் அடிப்படையிலும் பல்வேறு வகையான இயற்கை பொருள்களின் மீது தெய்வ சக்திகள் இருப்பதாக நினைத்து வழிபடத் தொடங்கினர். அத்தகைய இயற்கை வழிபாட்டினுள் மர வழிபாடும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதன் அடிப்படையில் பண்டைய காலமக்கள் வழிபட்டு வந்த இயற்கை வழிபாட்டின் தன்மையையும் மாற்றங்களையும் தொகை நூல்களின் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கை வழிபாடும் நம்பிக்கையும்

மனிதர்களுடைய தெய்வவழிபாட்டின் தொடக்கமாக இயற்கை வழிபாடே இருந்துள்ளது. இயற்கை வழிபாட்டின் தன்மையை “மனித இனத்தவரிடையே சமயம் பற்றிய நம்பிக்கை முதல் முதலில் ஏற்பட்டிருக்குமாயின் அது இயற்கைப் பொருள்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு அப்பொருள்களை வழிபட்டதன் மூலமே ஏற்பட்டிருக்கும் என்பார் மேக்ஸ் முல்லர். எகிப்திலும் பிற பகுதிகளிலும் செய்த அகழ்வாய்வுகளின் மூலம் இயற்கை வழிபாட்டிற்கான சான்றுகள் கிடைத்துள்ளன என்கிறார் இவர். அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களை நுணுகி உய்த்துணர்ந்தால் தொன்மை மக்களின் இயற்கை பொருட்களின் மீது கொண்டிருந்த அச்சம் கலந்த வியப்பையும் மதிப்பையும்

ஈடுபாட்டையும் போற்றத்தக்க எண்ணத்தையும் அறிய இயலும்" (பக்தவச்சலபாரதி, 1999) எனும் கருத்தின் வழி அறியலாகிறது. மக்களிடையே இயற்கை வழிபாட்டிற்குரிய முக்கிய காரணங்களாக அச்சமும் வியப்புமே உள்ளதன் தன்மையை அறிய முடிகின்றது. பல்வேறு நாட்டு மக்களிடையேயும் இயற்கை வழிபாடானது முக்கியத்துவம் கொண்டு இருந்ததை உணர முடிகிறது.

இயற்கை சக்திகளான ஐம்பெரும் பூதங்களினால் ஏற்படும் இயற்கை சீற்றங்கள் மனிதனுக்கு அச்சமூட்டியதன் விளைவாகவே அவற்றை வணங்கத் தொடங்கினான். அவற்றை வழிபடுவதன் மூலமாக தங்களுக்கு தீங்குகள் நிகழாது எனும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனை உணர்த்துபவையாக" நம்பிய பேராற்றலை தன் பக்கம் ஈர்க்கவும், தனக்குத் துணையாக்கிக் கொள்ளவும், அப்பேராற்றலை அடைய முயன்ற மாந்தன், அடுத்து அழைக்கும் வழிகளைத் தேடினான்" இக்கருத்தின் வழியே வழிபாட்டு முறைகள் தோற்றம் பெற்ற தன்மையை அறியலாம். இயற்கையானது மனித வாழ்வோடு பிணைந்துள்ள ஒரு சக்தி ஆகும். மனிதன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளுக்காக இயற்கையையே சார்ந்திருந்தான். இயற்கையின் மூலம் வாழ்வு செழிக்கவும் தீமை நிகழாமல் இருக்க வேண்டி வழிபடத் தொடங்கினான் என்பதை அறிய முடிகிறது.

## வழிபாடும் பலி கொடுத்தலும்

தெய்வ வழிபாட்டில் பலி கொடுத்தல் ஒரு முக்கிய நம்பிக்கைக்குரிய சடங்காக இருக்கின்றது. தாங்கள் நினைத்த காரியங்கள் நன்றாக முடிவதற்கும் வேண்டிய செயல்கள் வெற்றி பெற்றதற்காகவும் இறைவனுக்கு செய்கின்ற கைமாறாகவே பலி கொடுத்தல் நிகழ்வை மக்கள் கையாண்டுள்ளதை "இவ்வுலகம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது என்றும் அந்த சக்தியை வழிபாட்டின் மூலமாகவும் பலி கொடுப்பதன் மூலமாகவும் திருப்திப்படுத்தி நமக்கு உதவி புரியச் செய்யலாம் என்றும் அந்த சக்தியை ஞானத்தால் அல்லாமல் பக்தியால் மட்டுமே அறிய முடியும் அனுமானம் (கற்பிதம்) செய்து கொண்டு அதன் அடிப்படையில் உருவாகும் நம்பிக்கைகளும் நடைமுறைகளும் அடங்கிய ஒரு அமைப்பை சமயம் என்று வரையறுக்கலாம்" (Sivasubramanian, 2021) என்கிற வரிகள் தெளிவுபடுத்துகின்றது. உயிரினங்களை பலி கொடுப்பதன் மூலமாக இறைவனை திருப்திப்படுத்திவிட முடியும் என அனுமானம் மக்களிடையே காணப்பட்டதையும் அறிய முடிகிறது.

## சங்க இலக்கியத்தில் மர வழிபாடு

இயற்கை பொருட்களில் ஒன்றான மரம் வளரும் உயிர்களில் மிகப்பெரும் ஆற்றலும் சக்தியும் கொண்டது. அத்தகைய மரங்கள் சிலவற்றுள் தெய்வம் குடியிருப்பதாகவும் அவற்றிற்கு தெய்வீக சக்தி இருப்பதாகவும் நம்பினார்கள். அவற்றை வழிபடுவதன் மூலம் எவ்வித தீங்கும் நேராது என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தனர். தெய்வம் உறையும் மரங்களாக ஆலமரம், வேப்பமரம், கடம்பமரம், பனைமரம், வாகைமரம் போன்ற மரங்களை மக்கள் வணங்கியுள்ளனர். இயற்கை தெய்வங்களுக்கும் நடுகல் தெய்வங்களுக்கும் மரங்களின் நிழலில் கோவில்களை நிறுவியும் வழிபட்டுள்ளனர். தெய்வத்தோடு தொடர்புபடுத்தியும் அவற்றிற்கு பலியிட்டும் வழிபாடு செய்து வந்துள்ளார்கள்.

தெய்வம் உறைவதாக நம்பிய வேப்பமரத்திற்கு கொழுத்த பசுமாட்டை கொன்று அதன் குருதியை துவி வழிபட்டதை,

"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிக்கு

கொழுப்பா எறிந்து குருதி தூஉய்" (அகம்.309)

எனும் சங்கபாடல் வரியின் மூலம் அறிய முடிகிறது. காடுகளின் வழியே நடந்து செல்லும் கலைஞர்கள் அங்குள்ள மரங்களில் உறைகின்ற கடவுளை வழிபட்டு சென்றுள்ளமையை,

"வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கின்

காடுறை கடவுட் கடன் கழிப்பிட பின்னை" (பொரு.51)

என்கிற வரிகள் உணர்த்துகின்றது. இவ்வாறு வழிபட்டு செல்வதால் காடுகளின் மூலமாகவும் காட்டில் வாழும் விலங்குகள் மூலமாகவும் துன்பம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென காடுகளின் மரங்களில் உறைதுள்ள கடவுளை வழிபட்டிருக்கின்றனர்.

மக்கள் அதிகமாக சென்று வருகின்ற எங்களுடைய ஊர் வாயிலில் மக்கள் அருந்துவதற்கு நீர் எடுத்துச் செல்லும் துறை உள்ளது. அதற்கு முன்புறம் கடவுளாக வழிபடும் ஆண்டு முதிர்ந்த கடவுள் முதுமரம் இருக்கிறது. அதனொடு பல ஆண்டுகள் வளர்ந்து பெரிய உருவம் கொண்ட முதிர்ந்த மரங்களும் உள்ளன. அத்தகைய முதுமரங்களில் உறையும் தெய்வத்தால் நீர்த்துறை பாதுகாக்கப்படுகிறது என்பதனை.

“எம் மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய

கடவுள் முதுமரத்து....” (Parimanam, Balasubramaniyam, 2004a)

எனும் தொகை செய்யுள் வரி உணர்த்துகிறது. அங்கு சென்று வரும் மக்களுக்கு பாதுகாப்பாகவும் உறுதுணையாகவும் உள்ளதால் தெய்வமாக வழிபட்டுள்ளனர். பல தலைமுறைகள் கடந்து வளர்ந்த முதுமையான மரங்கள் கடவுளாக பார்க்கப்பட்டுள்ளதை,

“நெடு வீழ் இட்ட கடவுள் ஆலத்து

உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை”

எனும் வரிகள் காட்டுகிறது. ஆலமரங்களில் தெய்வம் இருப்பதாக எண்ணி அதனை மகிழ்விக்கும் பொருட்டு பலியிட்ட விலங்கின் குருதியை சோற்றில் கலந்து அச்சோற்றை மரத்திற்கு படைத்தனர். அதனை உண்ட காக்கைகள் ஆரவாரம் இட்டுக் கொண்டிருந்தன என்பதையும் சங்கப்பாடல் வழி அறிய முடிகிறது.

ஏறுதழுவுதல் நிகழ்ச்சியின் போது காளைகள் வீரர்களின் குடலை குத்தி எடுத்து மாலையாக அணிந்து கொண்டிருக்கும் காட்சிக்கு உவமையாக,

“ஆலும் கம்பும் அணிமார் விலங்கிட்ட

மாலை போல் தூங்கும்....”

என்ற கலித்தொகை பாடலின் மூலம் மக்கள் வணங்குகின்ற மரமான கடம்ப மரத்திலும் ஆல மரத்திலும் வழிபடும்போது அவற்றில் மாலைகள் தொங்க விட்டிருப்பதை போன்று இருந்தது என உவமித்துக் காட்டப்பட்டுள்ளது.

## காவல் மரம்

இயற்கை பொருட்களின் மூலமாக பெரும் நன்மை அடைந்த மக்கள் மரம், செடி, கொடிகளை தங்களுடைய இனக்குழு சமூகத்தின் குலக்குறிகளாக ஆக்கி வழிபடத் தொடங்கினர். இதனுடைய வளர்ச்சியானது அரசுகள் தோன்றிய போதும் ஒவ்வொரு அரசும் ஒரு மரத்தை காவல் மரமாகக் கருதினர்.

மன்னர்களின் குலக்குறிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மரங்கள் அவ்வரசுகளால் வழிபடப்பட்டன. அரசுக்குரிய காவல் மரங்கள் பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டன. காவல் மரங்களை பகைநாட்டு அரசன் வெட்டி வீழ்த்துவதன் மூலம் மன்னனையே வென்ற சிறப்பினை பெறுகின்றான். அதனை வெளிப்படுத்துவதாக,

“கடிமரம் தடியும் ஓசை தன்ஊர்....” (Parimanam, Balasubramaniyam, 2004b) எனும் வரியும் “கடிமரந் துளங்கிய காவு நெடநகர்...”

எனும் வரிகள் குலக்குறியான காவல் மரங்களை அழித்த செய்தியை காணமுடிகிறது. நன்னன் என்ற குறுநில மன்னனுடன் போரிட்டு வென்ற கோசர்கள் அவனது காவல் மரமான மா மரத்தை வெட்டி வீழ்த்தியுள்ளதை,

"நறுமா கொன்று நாட்டிற் போகிய

ஒன்று மொழிக் போசர் போல்..." (Parimanam, Balasubramaniyam, 2004c)

என்கிற சங்கப்பாடல் வழி அறியலாம். தன் காவல் மரத்தை பாதுகாக்காமல் இருப்பது தன் வீரத்திற்கு இழிவாகவும் பார்க்கப்பட்டது. அன்னி என்ற குறுநில மன்னன் பறந்தலை என்னும் போர்க்களத்தில் திதியன் என்பவனது பழமையான சிறப்புடைய புன்னை மரத்தை வெட்டிய நிகழ்வை,

"பொன்னினர் நறுமலர்ப் புன்னை வெட்கித்

திதியனோடு பொருந அன்னி" (Parimanam, Balasubramaniyam, 2004d)

என்னும் அகநானூறு பாடல் கூறுகிறது. பகைவனது குலக்குறியினை தனதாக்கிக் கொள்ளும் முயற்சிகள் வெளிப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. குலக்குறியான காவல் மரங்களை பாதுகாக்கத் தவறியவன் அரசாளும் தகுதியற்றவனாகவும் கருதப்படுகிறான். பிற அரசர்கள் வழிபடுகின்ற காவல் மரத்தினைக் கொண்டு வென்ற அரசன் முரசு செய்கின்ற வழக்கம் இருந்துள்ளது.

நெடுஞ்சேரலாதன் என்ற சேர மன்னன் தன் பகைவனின் காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டினான் என்பதை,

"சால்பெருந் தானைச் சேரலாதன்

மால்கடல் ஓட்டிக் கடம்பறுத் தியற்றிய

பண்ணமை முரசின் கண்ணதிர்ந்தன்ன" (Parimanam, Balasubramaniyam, 2004d)

என்ற அகநானூற்றின் வழி அறியலாம். இச்செயல் மன்னனுக்கு அவமதிப்பிற்குரிய செயலாகவும் கருதப்பட்டுள்ளது. மேலும் சேரனுக்கு பனை, சோழனுக்கு ஆத்தி, பாண்டியனுக்கு வேம்பு போன்றவை கடி (காவல்) மரங்களாக இருந்துள்ளதை சங்கப்பாடல்கள் உணர்த்துகிறது.

## தெய்வ நம்பிக்கையில் மன்றங்கள்

மக்கள் அனைவரும் கூடும் ஊர்ப்பொது இடங்களை மன்றம் என அழைத்துள்ளனர். இங்கு மக்கள் கூடுவது மட்டுமின்றி பல்வேறு விதமான வழக்குகளும் விசாரிக்கப்பட்டுள்ளன. மன்றமானது பல மரங்கள் நிறைந்து இருக்கின்ற இடமாகவும் இருந்துள்ளது. வாகை மரங்கள் இருக்கும் இடம் வன்னி மன்றம் என்றும், விளா மரங்கள் இருக்கும் இடம் வெள்ளி மன்றம் என்றும், இலந்தை மரம் இருக்கும் இடம் ரத்தி மன்றம் என்றும் பல்வேறுபட்ட மன்றங்கள் இருந்த செய்தியை மணிமேகலை எனும் நூலின் வாயிலாக அறியலாம். இம்மன்றங்களில் உள்ள மரங்களில் தெய்வம் வாழ்வதாகவும், தீயவர்களை அழிக்கும் என்பதனை,

"மன்ற மராஅத்து பேஎமுதிர் கடவுள்

கொடியோர்த் தெறூஉ மென்ப..." (Parimanam, Balasubramaniyam, 2004c)

எனும் வரிகள் உணர்த்துகிறது. பன்னெடுங்காலமாக பெரிய அடியை உடைய பனை மரங்களிலும் கடவுள் உறைவதாக நம்பி வழிபாடு செய்துள்ளனர் என்பதை,

"தொன்று உறைகடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை வாங்கு மடந்தை குடம்பைத்" (Parimanam, Balasubramaniyam, 2004a)

இப்பாடல் வரி உணர்த்துகிறது. இதற்கு பின்னத்தூரார் தம் உரையில், "தம் குல தெய்வத்தையும் ஊர்ப்பொதுத் தெய்வத்தையும் பனையிலேற்று வித்து வணங்கி வருவது தொன்றுதொட்டு நெய்தல் நிலத்து வழக்கு" (Sivasubramanian, 2021). இத்தெய்வம் நல்ல செயல்பாடுகளுக்கு மட்டுமே துணைபுரியும் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## இறை வழிபாட்டில் தலவிருட்சம்

மரத்தில் உறையும் தெய்வத்தை முதலில் வழிபட்டனர். பின்பு அம்மரங்களைச் சுற்றி கோவில் கட்டி வழிபாடு செய்யத் தொடங்கினர். அதுவே பின் வந்த காலங்களில் தல மரங்களாக மாற்றமடைந்தன. ஆலமரத்திற்கு உரியவராக சிவபெருமானை அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

"ஆலமர் செல்வன் அணிசால் பெருவிரல்…" (Parimanam, Balasubramaniyam, 2004e)

எனும் கலித்தொகை பாடல் வரி உணர்த்துகிறது. இதைப் போன்று வாகை மரத்திற்கு கொற்றவையும் கடம்ப மரத்திற்கு முருகப் பெருமானும் உரியவராக,

"கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்

சூர்நவை முருகன்…." (Parimanam, Balasubramaniyam, 2004b)

எனும் சங்கப்பாடல் மூலம் காணமுடிகிறது. இதன் எச்சங்களாக அரச மரத்திற்கு உரியவராக விநாயகரும் வேப்பமரத்திற்கு மாரியம்மனையும், கடம்ப மரத்திற்கு முருகப்பெருமானையும் குறியீடுகளாக வைத்து வழிபடுவதை காணலாம். இறைவன் முதலில் தல மரத்தின் கீழேதான் அறியப்பட்டதாக கோயில் தலபுராணங்கள் கூறுவதன், காரணமாக அம்மரங்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றது.

ஒவ்வொரு திருத்தலங்களுக்கும் ஒரு தலவிருட்சம் என்று புன்னை, அத்தி, குருந்தம், எட்டி, வில்வம், கடம்பம், பனை, இழந்தை, புளியமரம் போன்ற பல்வேறு மரங்கள் இலக்கியங்களில் கூறப்படுகின்றன. சைவ சமயத்தில் மட்டுமின்றி பௌத்த சமயத்திலும் அரச மரத்தின் கீழ் அமர்ந்திருந்த பொழுதே புத்தருக்கு ஞானம் கிடைத்ததால் அம்மரம் இன்று போதிமரம் என்றும் பெயரிட்டு பலரால் வழிபடப்படுவதை அறிய முடிகின்றது.

## மர வழிபாட்டு நம்பிக்கைகள்

சங்ககால முதல் இக்கால கட்டம் வரையில் மக்களிடையே காணப்படுகின்ற நம்பிக்கையின் அடிப்படையில் பல்வேறு வகையான மரங்கள் வழிபடப்பட்டு வருகின்றனர். மரங்களுக்கு செய்கின்ற சடங்குகள் படையல் முறைகள் அனைத்தும் அம்மரங்களுக்குரிய இறைவனுக்கு செய்வதாகவும் எண்ணி செய்துள்ளனர். அதனை வெளிப்படுத்தும் விதமாக,

"கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்" (Parimanam, Balasubramaniyam, 2004a)

என்ற சங்கச் செய்யுளின் வழி கடம்ப மரத்திற்குரிய பூக்களை சூடி முருகப்பெருமானை நினைத்து வழிபட்டுள்ளனர். அம்மரத்திற்குரிய கடவுளை வழிபாடு செய்வதன் மூலம் நம்முடைய வாழ்வின் சிக்கலுக்கு தீர்வு கிடைக்கும் என்ற அடிப்படையில் மக்கள் மரங்களை வழிபட்டுள்ளனர். இதனுடைய எச்சமாகவே கோவில்களில் உள்ள தல மரங்களில் குழந்தை இல்லாத தம்பதியர் ஒரு தொட்டில் கட்டி வழிபாடு செய்வதும், பல நாட்களாக திருமணமாகாதவர்கள் அரசமரம் ஆணாகவும் வேப்பமரம் பெண்ணாகவும் உருவகப்படுத்தி இணைந்து இருக்கும் இடத்தில் மஞ்சள் கொம்பு கட்டி வழிபடுவதும், எட்டி மர குச்சிகளை வீட்டின் முன்பு கட்டுவதால் தீய சக்திகள் அணுகாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் இச்செயல்களை இன்றும் செய்து வருவதை காண முடிகின்றது.

## முடிவுரை

மனிதர்கள் அச்சத்தின் காரணமாகவும் நம்பிக்கையின் அடிப்படையிலும் இயற்கைப் பொருள்களை வழிபட்டுள்ளனர். உயிரினங்களை பலி கொடுப்பதன் மூலமே இறைவனை திருப்தி அடையச் செய்ய முடியும் எனும் நம்பிக்கையின் அடிப்படையில் பலி கொடுத்து வழிபாடு செய்துள்ளனர். மக்கள் கூடுகின்ற ஊர்ப்பொது இடங்களில் மன்றங்களில் இருக்கும் மரங்களில்

உறையும் தெய்வம் மக்களைப் பாதுகாக்கும் என்ற நோக்கில் வழிபட்டுள்ளனர். அரசர்கள் காவல் மரங்களை தம் குலக்குறி அடையாளங்களாகக் கொண்டு பாதுகாத்துள்ளனர். ஒவ்வொரு கடவுளர்களுக்கும் ஒரு மரம் என அடையாளப்படுத்தி அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து தல மரங்களாக வழிபடப்பட்டுள்ளன. தல மரங்களில் பல நம்பிக்கைக்குரிய சடங்குகளை செய்தும் வழிபட்டனர். இத்தகைய மரவழிபாடுகள் மக்களிடையே மிகுந்த நம்பிக்கைக்குரிய வழிபாடாக இருந்துள்ளதைக் காண முடிகிறது.

## References


Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004a) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004b) Purananuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004c) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004d) Akananuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004e) Kalithogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Sivasubramanian, A. (2021) Tamilsamugathil Iranthor valipadum Munnor valipadum, New Century Book House, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License